**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.158/2017 – P.W.3**

Deposition of witness for Prosecution:

Name : திரு. மூர்த்தி Father's Name. சுப்பிரமணியன்

Village : மருதூர் வடக்கு Age: 50

Date :15.09.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.09.2025
**(1, 2, 4, 5, 7, 9 முதல் 11, 13, 14, 16, 17 மற்றும் 19 ஆகிய எதிரிகள் ஆஜர். 6 மற்றும் 18 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கிறஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச. பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**
**1, 4 முதல் 6, 9 முதல் 11, 13, 14 மற்றும் 16 முதல் 19 ஆகிய எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை இந்த வழக்கில் போலிசார் எத்தனை முறை விசாரணை செய்தார்கள் ? என்றால் ஒருமுறைதான் விசாரித்தார்கள். அவ்வாறு போலிசார் விசாரித்தபோது, நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மட்டும்தான் சொன்னேன். ஓ.எஸ். மணியனை தாக்கப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் அவர் வேட்டி சட்டை இன்றி இருந்தாரா ? அல்லது அதை பிடித்துக் கொண்டிருந்தாரா ? என்றால் கூட்டமாக இருந்ததால், எனக்கு அவர் எப்படி இருந்தார் என்றெல்லாம் தெரியாது. கூட்டமாக இருந்ததால் அங்கு என்ன சம்பவம் நடந்தது என்று தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களானது அப்போது போலிசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் சொன்னேனா ? என்றால் ஆமாம். ஓ.எஸ்.மணியன் எனக்கு 15 வருடங்கள் பழக்கம். நானும் அதே கட்சியில் தான் உள்ளேன்.

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் நடந்ததா ? என்றால் சம்பவத்தன்று நான் அங்கு கல்யாணத்திற்கு சென்றிருந்தேன். அங்கு ஒரே கூட்டமாக இருந்ததால், என்ன சம்பவம் நடந்தது என்றே எனக்கு தெரியாது.

**2 மற்றும் 7 ஆகிய எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** மேற்படி எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்வதாகவும் வேறு குறுக்கு விசாரணை இல்லை என்றும் தெரிவித்தனர்.

அரசுத்தரப்பிழ் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் நடந்த உண்மை விபரங்களை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால், அவர்களுக்கு ஆதரவாக போலிசார் சொல்லிக்கொடுத்து முதல் விசாரணையில் சாட்சியமளித்ததாகவும், கூட்டமாக இருந்ததால் அங்கு என்ன சம்பவம் நடந்தது என்று தெரியாது என்றும் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே, கடந்த 12.02.2024 ஆம் தேதி முதல் விசாரணையாக சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு குறுக்கு விசாரணைக்காக சுமார் 1, 1/2 வருடங்களுக்கு பின்னிட்டுத்தான் இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பொதுவாக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கக்கூடாது என்ற விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே, எதிரிகள் தாக்கியதில் எனக்கும் காயம் ஏற்பட்டு நானும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று சேர்ந்தேன் என முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் கல்யாண மண்டபத்தில் படியில் இறங்கும்போது,

கூட்டத்தில் யாரோ தள்ளிவிட்டதில்தான் எனக்கு விலா எலும்பில் காயம் ஏற்பட்டு அதற்காகத்தான் சிகிச்சைக்கு சென்றேன். கூட்டத்தில் என்னை யார் தள்ளிவிட்டார்கள் ? என்று தெரியாது. போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் எதிரிகள் தாக்கியதில்தான் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

(ஒம்/– G. கிருஷ்ணன்)
தலைமை குற்றவியல் நடுவர்,
நாகப்பட்டினம்.